<u>சிறப்பு சார்பு நீதிமன்றம் II</u>
<u>( மோட்டார் வாகன விபத்து வழக்குகள் தீர்ப்பாயம், சென்னை)</u>

**MCOP No.4450/2022**
**MCOP No.4451/2022**
**MCOP No.4447/2022**
**MCOP No.5124/2022**
**MCOP No.5121/2022**

| | |
|---|---|
| சாட்சியின் வரிசை எண் | மசா5 (5124/2022) |
| பெயர் | பவித்ரா |
| க/த.பெயர் | ஆனந்த்ராஜ் |
| வயது | 29 |
| விலாசம் | மரக்காணம் |
| தொழில் | வீட்டுக்குடித்தனம் |

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6 ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 23.01.2025 ல் பதிவு செய்யப்பட்டது.

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். இதில் என்னை எனது தரப்பில் முதலாவது சாட்சியாக விசாரித்து கொண்டு எனது முதல் விசாரணை வாக்குமூலத்தை நிரூபண வாக்குமூலமாக ஏற்கனவே தாக்கல் செய்திருக்கிறேன். இதில் கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு

செய்துக்கொள்ள வேண்டுகிறேன். விடுவிப்பு குறிப்பேடு மசாஆ 20, என்னுடைய ஆதார் அட்டை நகல் மசாஆ.21, சி.டி ஸ்கேன் அறிக்கை மசாஆ 22, என்னுடைய பான் அட்டை நகல் மசாஆ.23, என்னுடைய வங்கிக்கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல் மசாஆ 24. எனது மனுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் பயணம் செய்த ஆட்டோவில் மொத்தம் 5 பேர் இருந்தோம். நாங்கள் பயணம் செய்த ஆட்டோவில் மொத்தம் 8 பேர் சென்றோம் என்றாலும், இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆட்டோவில் அதிகப்படியான நபரை ஏற்ற சென்றதால் தான் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நாங்கள் சென்ற ஆட்டோவும், எதிரே வந்த காரும் நேருக்கு நேர் மோதிக்கொண்டது என்றால் சரிதான். விபத்து ஏற்பட்டவுடன் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சென்றேன். நான் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளேன். சிகிச்சை பெற்றதற்கு நான் செலவழிக்கவில்லை என்றால் சரியல்ல. அதிகப்படியான நபர்களை ஏற்றிச்சென்று ஆட்டோ ஒட்டுநர் தான் கவனக்குறைவாக ஆட்டோவை ஒட்டி இந்த விபத்தை ஏற்படுத்தி உள்ளார் என்றால் சரியல்ல. அதனால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு வாகன ஒட்டுநருக்கு விபத்து சமயத்தில் ஒட்டுநர் உரிமம் இல்லை என்பதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மனுவில் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஒட்டுநரின் பெயர் குறிப்பிடவில்லை

என்றால் அது பற்றி எனக்கு தொியாது. பல்வேறு தலைப்புகளில் கீழ் நான் கோாியுள்ள இழப்பீடு தொகை அதிகப்படியானது என்று சொன்னால் சாியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவா் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.

**சிறப்பு சாா்பு நீதிபதி**
**சிறப்பு சாா்பு நீதிமன்றம் II**
**சென்னை**